வேளாண்மை துணை இயக்குநர்/செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு அவர்களின்
செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திருமதி.இரா.சாவித்திரி, எம்.எஸ்ஸி.,(வே).,

----------

செ.மு.ஆ.எண். அ1/4891/2020 நாள்: 06.09.2021

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி-IV க்கான இளநிலை உதவியாளர் பணியிடங்கள் (2018-2019 மற்றும் 2019-2020) ஈரோடு விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு பெற்றமை - பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டமை - பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை : 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடிதம் எண்.2341/PSD-I/2020, நாள்: 28.05.2020.
2.அரசாணை நிலை எண்.978, வேளாண்மை துறை, நாள்:23.05.1985.
3.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணைகள், நாள்: 21.07.2020.

----------

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக ஈரோடு விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு பார்வை (1)இன் படி ஒதுக்கீடு பெற்று பார்வை(3)இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி பணி நியமனம் செய்யப்பட்ட கீழ்க்குறித்த பணியாளர்களின் பணியினை அவர்களுக்கெதிரே கலம் (4)இல் குறிப்பிட்டுள்ள தேதி முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும், தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் தற்போதைய பணியிடம்<br>திருவாளர்கள் | பணி சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பா.சுபாஷினி, இளநிலைஉதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், நம்பியூர். | 27.07.2020 முற்பகல் | 27.07.2020 முற்பகல் |
| 2 | இரா.பாலமுருகன், இளநிலைஉதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கொடுமுடி. | 29.07.2020 முற்பகல் | 29.07.2020 முற்பகல் |
| 3 | மு.மணி, இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், ஈரோடு. | 31.07.2020 முற்பகல் | 31.07.2020 முற்பகல் |
| 4 | கு.திவ்யபாரதி, இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம். | 31.07.2020 முற்பகல் | 31.07.2020 முற்பகல் |

இப்பணிவரன்முறையானது உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2018-2019 மற்றும் 2019-2020 தொகுதி-IV இன்படியான நியமனங்கள் தொடர்பான வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் தகுதிகாண்பருவ காலத்திற்குள் **1)வேளாண்மை துறைத்தேர்வு, 2)தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு** ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும், **பவானிசாகரில் நடைபெறும் அடிப்படைப் பயிற்சியில்** கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வேளாண்மை துணை இயக்குநர் /
செயலாளர்,
ஈரோடு விற்பனைக்குழு,
ஈரோடு.

**பெறுநர் : (உரிய வழியாக)**
மேற்குறிப்பிட்ட பணியாளர்கள்.

**நகல் :**
1.விற்பனைக்கூட கண்காணிப்பாளர்கள்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
ஈரோடு, நம்பியூர், கொடுமுடி.
2.பணிப்பதிவேட்டிற்கு-(4).
3.இருப்புக்கோப்பிற்கு.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது :**
ஆணையர்,
வேளாண்மை விற்பனை மற்றும்
வேளாண் வணிகம்,
சென்னை.